முருகப்பெருமான் துணை

**உலக ஞானத் தலைவன் முருகப்பெருமான் அருளிய அருள்வாக்கு**

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்** பாகம் : 1646

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**01.04.2024,** திங்கட்கிழமை

1. தர்ம ராஜனே அரங்கா வாழ்க
   தவபலம் கொண்ட தேசிகா வாழ்க
   பெருமைமிக்க ஞான உலகம் அமைக்க
   பிரணவக்குடில் படைத்த அரங்கனே வாழ்கவாழ்க
2. வாழ்க என வாழ்த்தி சுப்ரமணியர் யானும்
   வழங்குவேன் அரங்கனுக்கு ஞான அறிவுரை ஆசி
   (சோபகிருது வருடம் பங்குனி மாதம் 19 ம் நாள், 01.04.2024, திங்கட்கிழமை)
   ஊழ் போக்கும் கலியின் சிறந்த ஞானி
   உண்மை ஞானம் தரும் மாதவசி நீ
3. தவசி உன் வழி உலகோர் வர
   தரணியில் அற்புதம் நிகழக்கூடும்
   அவசியம் உன் அன்னதான சேவையை
   அனைவரும் ஏற்று அகிலமெங்கும் தர்மம் புரிய
4. தர்மலோகமாக இந்த உலகம் மாற்றம் கண்டு
   தரணியே ஞானவான்கள் தலைமை கொண்ட பூமியாக
   வானவர்கள் போற்றுகின்ற வள்ளலும்
   வள்ளல் தன்மையும் நிறைந்த ஞான பூமியாக
5. ஆகவே உலகம் மாற்றம் கொண்டு
   ஆறுமுகன் யான் வெளிப்பட
   அற்புதம் அரங்கன் அவதார நோக்கமாக
   சித்தி கொள்ளக் கூடும்
6. கூடவே உலகோர் அரங்கன் திருவடி பற்றி
   குவலயத்தில் அரங்கன் வழி தொடர்ந்து வருகவருக
   நாடெங்கிலும் சன்மார்க்க நெறியொடு
   நாட்டிடுவேன் அரங்கன் சுத்த சைவ நெறி

7. அகத்திய மகரிஷியின் ஒரே குலமெனும்
அகத்தியர் குலம் உலகமெங்கும் ஒன்றாகி
வகை பட அன்பர்கள்
வல்லமைபட ஞான வழி வந்து

8. அரங்கனால் பிறவாத பெரும் பேறு கண்டு
ஆற்றல்பட ஞானிகளாகவும் மாற்றம் கண்டு
அகிலத்தில் ஞான ஆட்சித் தரக்கூடும்
ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–